**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்**

**முன்னிலை. திரு. D.பொன்வேந்தன்., பி.டெக், எம்.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, வானூர்**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் நாள் திங்கட்கிழமை.

**(2057- திருவள்ளுவராண்டு, விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 16 ஆம் நாள் திங்கட்கிழமை)**

**அ.வ.எண். 72/2019**

**CNR NO:- TNVP-35000104-2025**

S.வெங்கடசுப்பு. ...வாதி

**/எதிர்/-**

V.ராஜேஷ்கண்ணன். ... பிரதிவாதி

**(Amended as per Order in I.A.No.273/2025, dated 07.07.2025)**

இவ்வழக்கானது 25.03.2026-ம் தேதியன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.சர்வர்கான் அவர்களும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பா.தமிழரசன் அவர்களும் ஆஜராகி வாதி வாதங்கள் கேட்கப்பட்டும், பிரதிவாதி தரப்பிற்கு போதிய வாய்ப்பளித்தும் வாதம் முன்வைக்கப்படாமலும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:29:13 +0530

**<u>தீர்ப்புரை</u>**

**1.** வழக்குச் சொத்து வாதிக்கு உரிமையானது என விளம்புகை செய்யக்கோரியும், அதனுடன் இணைந்து வழக்கு சொத்தினை வாதி அமைதியான முறையல் அனுபவித்து வருவதை பிரதிவாதியோ அல்லது அவரது ஆட்களோ அல்லது அவரது முகவர்களோ எவ்வித தடையும் இடைஞ்சலும் செய்யாமல் இருக்க பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்ளை பரிகாரம் கோரியும், வழக்கு "பி" அட்டவணை சொத்தில் வைக்கப்பட்டுள்ள இரும்பு கேட்டை அப்புறப்படுத்த பிரதிவாதிக்கு எதிராக செயல் உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டியும், வழக்கு செலவுத் தொகை கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. வழக்குரை சுருக்கம்</u>** :-

**2.1)** வழக்கு "ஏ" ஷெட்டியூல் சொத்தானது பாலகிருஷ்ண நாயுடு என்பவருக்கு உரிமையாய் இருந்து அவரது ஆயுளுக்கு பிறகு அவரது குமாரர் வேணுகோபால் நாயுடு என்பவர் வாரிசு முறையில் உரிமை அடைந்து அனுபவித்து வந்து பின்னிட்டு 29.05.2000-ம் தேதியில் வாதியுடன் சேர்ந்து சம்மதித்து எழுதிக்கொண்ட பரிவர்த்தனை பத்திர எண்.1707/2000 ஆவணத்தின்படி வாதியின் சுவாதீனத்திற்கும், அனுபவத்திற்கும் வந்து, வாதியானவர் அனுபவித்து வருகிறார் என்றும், மேற்படி பரிவர்த்தனை பத்திரத்தின் மூலம் அடைந்த வழக்கு சொத்தை 12.11.2009-ல் வாதி மற்றும் அவரது குமாரர் தருண்ராஜ் மற்றும் குமாரத்திகள் பத்மாவதி, லாவண்யா ஆகிய நால்வரும் சம்மதித்து எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் வழக்குச் சொத்தானது வாதியின் பாகத்திற்கு "ஏ" ஷெட்டியூலில் வைக்கப்பட்டு வாதியானவர் தற்பொழுது

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:29:19 +0530

வரை அதில் சவுக்கு மகசூல் செய்து வந்து, கற்தூண்கள் நட்டு, இரும்பு கம்பியால் வேலி அமைக்கப்பட்டு அனுபவித்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது. 29.05.2000-ம் ஆண்டில் ஏற்பட்ட பரிவர்த்தனை பத்திரத்தில் கண்ட வேணுகேபால் நாயுடு என்பவரின் தந்தை பாலகிருஷ்ண நாயுடு என்பவருக்கு உரிமையாய் இருந்த வழக்குச் சொத்தில் விளையும் விவசாய வருமானத்தில் ஒரு பகுதியை வழக்குச் சொத்து கிராமத்தில் உள்ள அருள்மிகு வேத விநாயகர் கோயிலுக்கு அன்னதானம் மற்றும் அபிஷேகம் நடத்தி வந்து அவரது ஆயுளுக்கு பின்னிட்டு அவரது ஒரே குமாரரான வேணுகோபால் நாயுடு நடத்தி வந்தும், பின்னிட்டு பரிவர்த்தனை பத்திரம் ஏற்பட்ட பிறகு பரிவர்த்தனை பத்திரம் மூலம் வாதியிடமிருந்து அடைந்த வழக்கு கிராம அயன் புஞ்சை புதிய சர்வே எண்.25/6-0.81 செண்டில் கீழ்புறம் உள்ள 0.65 செண்ட் நிலத்தில் வரும் விவசாய மகசூலில் ஒரு பகுதியை மேற்படி கோயில் கைங்கரியங்களுக்கு செலவிடப்பட்டும், வேணுகோபால் நாயுடுவிற்கு பின்னிட்டு அவரது ஒரே குமாரர் குமார் என்பவர் தொடர்ந்து செய்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது.

**2.2)** வாதிக்கும் பிரதிவாதிக்கும் சொத்து சம்மந்தமாக ஏற்கனவே வழக்கு விசாரணையில் இருந்து வந்த நிலையில் வாதியை பழி வாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு "ஏ" ஷெட்டியூல் சொத்தை வாதிக்கு தெரியாமல் பிரதிவாதி அவருக்குள்ள அதிகாரத்தையும், செல்வாக்கையும் பயன்படுத்தி வருவாய் துறையில் அருள்மிகு வேத விநாயகர் கோயில் பேரில் பட்டா மாற்றம் ஏற்படுத்திவிட்டார் என்றும், மேற்படி பட்டாவை ரத்து செய்து வாதி பெயருக்கு பட்டா வழங்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது.

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:29:23 +0530

**2.3)** வழக்கு "ஏ" ஷெட்டியூல் சொத்திற்கு மேற்கே அமைந்துள்ள பிரதிவாதியின் சொத்துக்கு செல்வதற்காக வேண்டி எவ்வித உரிமையும், அனுபவமும் இல்லாத வாதியின் "ஏ" ஷெட்டியூல் சொத்தில் மேற்கு பக்கத்தில் வடக்கு தெற்காக அமைந்துள்ள முள் வேலி கம்பியை அகற்றிவிட்டு சுமார் 10 அடி அகலத்தில் இரும்பு கேட் அமைத்து அதன் வழியாக மேற்கு பக்கத்தில் அமைந்துள்ள பிரதிவாதியின் நிலத்திற்கு செல்வதற்கு சுமார் 10 அடி பாதையை அமைக்க பிரதிவாதி முயற்சி செய்தார் என்றும், அதனை வாதி தடுத்து நிறுத்திவிட்டார் என்றும், மேலும், வழக்கு "ஏ" ஷெட்டியூலின் ஒரு பகுதியே "பி" ஷெட்டியூல் சொத்து என்றும், "பி" ஷெட்டியூல் சொத்தானது வழக்குரை மாதிரி வரைபடத்தில் AEFG என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வாதியின் "பி" ஷெட்டியூல் சொத்தில்தான் பிரதிவாதி பாதை அமைக்க முற்பட்டார் என்றும், மேற்படி "பி" ஷெட்டியூல் சொத்தில் அமைத்திருக்கும் இரும்பு வேலியை அகற்றிவிட்டு இரும்பு கேட் அமைத்து அதன் வழியாக "பி" ஷெட்டியூல் சொத்தில் பிரவேசிக்க முற்பட்டு வருகிறார் என்றும், வழக்கு "பி" ஷெட்டியூல் சொத்தில் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும், அனுபவமும் எப்பொழுதும் இருந்தது கிடையாது என்றும், மேற்படி பிரதிவாதியின் செயல் குறித்து வாதி வானூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அதன் பேரில் மனு எண்.66/2019 ஆக மனு ரசீது எண் வழங்கப்பட்டு பிரதிவாதியை காவல்நிலையத்தில் அழைத்து விசாரித்து "பி" ஷெட்டியூல் சொத்தில் இருந்த கம்பி வேலியை பிரித்து விட்டு இரும்பு கேட் போட்டதை அகற்றிவிட்டு வாதியின் சுவாதீனத்திற்கும், அனுபவத்திற்கும் தடையும் இடைஞ்சலும் செய்யக்கூடாது என எழுத்து மூலமாக பிரதிவாதியிடம் எழுதி வாங்கினார்கள் என்றும், இருந்தபோதிலும் பிரதிவாதி ஆள்பலம் மற்றும் அரசியல் செல்வாக்கின் காரணமாக வாதியின்

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:29:29 +0530

உடைமையில் பிரவேசிக்க முற்படுவார் என்றும், அதன் காரணமாக வழக்குச் சொத்து வாதிக்கு உரிமையானது என விளம்புகை செய்யகோரியும், வழக்கு சொத்தினை வாதி அமைதியான முறையல் அனுபவித்து வருவதை பிரதிவாதியோ அல்லது அவரது ஆட்களோ அல்லது அவரது முகவர்களோ எவ்வித தடையும் இடைஞ்சலும் செய்யாமல் இருக்க பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், வழக்கு "பி" ஷெட்டியூல் சொத்தில் அமைத்துள்ள பத்தடி அகலமுள்ள இரும்பு கேட்டை அகற்றி ஏற்கனவே இருந்த கம்பி வேலியை அமைத்து கொடுக்க வேண்டி பிரதிவாதிக்கு எதிராக செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது.

3. <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> :-

**3.1)** வாதியின் வழக்கில் கண்டுள்ள அம்சங்கள் யாவும் பொய்யானது, கற்பனையானது மற்றும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்குரையை வாதியே நிரூபிக்க வேண்டும் என்றும், வழக்கு "ஏ" மற்றும் "பி" அட்டவணையில் கண்டுள்ள 65 செண்டு நிலம் ஆதியில் முத்துசாமி நாயுடு குமாரர் பாலகிருஷ்ண நாயுடுவிற்கு உரிமையானது என்றும், மேற்படி பாலகிருஷ்ண நாயுடு வழக்கு சொத்தையும், இதில் சேராத சில சொத்துக்களையும் 14.11.1935-ம் தேதியில் ஆகாசம்பட்டு கிராமத்தில் இருக்கும் ஸ்ரீ வேத விநாயகர் கோயில், கிராம தேவதையாகிய பிடாரி செல்லியம்மன் கோயில் மற்றும் ஸ்ரீ மாரி செங்கழநீர் அம்மன் கோயில் ஆகிய 3 கோயில்களுக்கும் வானூர் சார் பதிவக ஆவண எண்.1917/1935-ன் படி ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் எழுதிகொடுத்துள்ளார் என்றும், மேற்படி தான

Digitally signed by PONVENTHAN D
PONVENTHAN D
Date: 2026.03.30 17:29:33 +0530

செட்டில்மெண்ட் பத்திரத்தில் தானம் கொடுத்த பாலகிருஷ்ண நாயுடு அவர் ஆயுள் வரை சாகுபடி செய்து அதில் வரும் வருமானத்தை கொண்டு மூன்று கோயில்களுக்கும் அன்ன நெய்வேத்தியம் செய்வதென்றும், அவர் ஆயுளுக்கு பின்னர் வழக்கு சொத்தும் அதில் சேராத இதர சொத்துக்களையும் அவருக்கு பிறக்கின்ற மூத்த ஆண் சந்ததி வாரிசு பரம்பரையாக நிலத்தை சாகுபடி செய்து மேற்கண்ட அன்ன நெய்வேத்தியம் நடத்தவேண்டும் என்றும், ஆண் சந்ததிகள் இல்லாவிட்டால் அடுத்த மூத்த ஆண் வாரிசுகள் மேற்கண்ட விவரப்படி நடத்த வேண்டும் என்றும், சொத்தை யாதொரு பராதீனமும் செய்யாமல் அன்ன நெய்வேத்திய காரியங்களுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும் என்றும், இதனை அப்போதைக்கு அப்போதைய தர்மகர்த்தாக்கள் கவனித்து வரவேண்டும் என்று அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்டுள்ளது என்றும், மேற்படி "ஏ" மற்றும் "பி" ஷெட்டியூல் சொத்து தான செட்டில்மெண்ட் பத்திரப்படி மேற்படி 3 கோயில்களுக்கு மட்டுமே உரிமையானது என்றும், மேற்படி சொத்துக்களும், கோயிலும் அறநிலையத்துறையின் கீழ் வரப்பட்டுள்ளது என்றும், இந்த சொத்து இன்றைய வரையில் பட்டா எண்.137 ஆக வருவாய் துறை ஆவணங்களில் வேத விநாயகர் கோயில் பெயரில்தான் உள்ளது என்றும், வாதியோ அல்லது பரிவர்த்தனை மூலம் பரிமாற்றம் செய்த வேணுகோபால் நாயுடு என்பவரோ உரிமை கோர முடியாது என்று சொல்லப்பட்டுள்ளது.

**3.2)** மேற்படி கோயிலுக்குச் சொந்தமான வழக்கு சொத்தை இந்து அறநிலைய துறையின் அனுமதி இல்லாமல் 29.05.2000-ம் தேதியில் பாலகிருஷ்ண நாயுடு குமாரர் வேணுகோபால் என்பவரிடமிருந்து வாதி பரிவர்த்தனை மூலம் மோசடியாக பத்திரம்

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:29:38 +0530

எழுதிக்கொண்டுள்ளார் என்றும், அந்த மோசடி பரிவர்த்தனை பத்திரம் மூலம் வழக்கு சொத்தை 12.11.2009-ம் தேதியில் அவருடைய குடும்ப உறுப்பினர்களுக்குள் பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொண்டுள்ளார் என்றும், மேற்கண்ட இரண்டு பத்திரங்களும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், வழக்கு சொத்தானது கோயிலுக்கு சொந்தமானது என்று சொல்லப்பட்டுள்ளது.

**3.3)** 29.05.2000-ம் தேதியில் ஏற்பட்ட பரிவர்த்தனை பத்திரத்தில் கண்ட விவசாய வருமானத்தில் ஒரு பகுதியை வேத விநாயகர் கோயிலுக்கு அன்னதானம் மற்றும் அபிஷேகத்தை வேணுகோபால் நாயுடு நடத்தி வந்தார் என்பதும், சர்வே எண்.25/6-ல் கீழ்புறம் உள்ள 65 செண்டு நிலத்தின் மகசூலில் ஒரு பகுதியை கொண்டு வேணுகோபால் நாயுடு இறந்த பிறகு அவரது குமாரர் குமார் கோயில் கைங்கரியங்களை தொடர்ந்து செய்து வருகிறார் என்பதையும் பிரதிவாதி மறுக்கிறார் என்றும், "ஏ" அட்டவணை சொத்திற்கு அருகில் ஒரு பொது பாதை உள்ளது என்றும், அதன் வழியாக தனி நபர்கள் பிரதிவாதியின் நிலத்திற்கு செல்வதால் பிரதிவாதி ஒரு இரும்பு கேட் அமைத்துள்ளார் என்றும், வழக்கு "பி" அட்டவணை சொத்து கோயிலுக்கு சொந்தமானதால் இந்து அறநிலையத் துறையின் கீழ் வருகிறது என்றும், தனிப்பட்ட முறையில் வாதி "பி" அட்டவணை சொத்தின் மீது உரிமை கோர முடியாது என்றும், "ஏ" மற்றும் "பி" அட்டவணை சொத்துக்கள் இந்து அறநிலையத் துறையின் கீழ் வருவதால் அனுமதி இல்லாமல் சொத்தை வில்லங்கம் செய்வதற்கு உரிமையில்லாத நபர்களிடமிருந்து மோசடியாக வாதி பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார் என்றும், மேற்படி சொத்துக்களானது இதுநாள் வரையில் வாதி அனுபவிக்கவில்லை

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:29:43 +0530

என்றும், வருவாய் துறை ஆவணங்களும் கோயில் பெயரில்தான் உள்ளது என்றும், மேற்படி வாதி பிரதிவாதிக்கு எதிராக கோருகின்ற சட்டத்திற்கு புறம்பான எந்த பரிகாரங்களும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், வழக்குரை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

**4. வாதி தரப்பில் தாக்கல் செய்த பதிலுரை சுருக்கம் :-**

வழக்குச் சொத்தானது 14.11.1935-ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி மேற்படி 3 கோயில்களுக்கும் உரிமையானது என்று சொல்லப்பட்டுள்ளது தவறு என்றும், மேற்படி ஆவணத்தின் மூலம் பாலகிருஷ்ண நாயுடு என்பவர் தனக்கு தானே ஒரு செட்டில்மெண்ட் எழுதிக்கொண்டார் என்றும், மேற்படி ஆவணத்தில், வழக்குச் சொத்தின் மூலம் வரும் வருமானத்தை கொண்டு கோயில் கைங்கரியங்கள் செய்து வரவேண்டும் என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றும், சொத்தின் உரிமையை பாலகிருஷ்ண நாயுடு என்பவரே வைத்துக்கொண்டு கோயில் நற்காரியங்களை செய்து வரவேண்டும் என்றும், அதற்கு பின்னிட்டு அவரது ஆண் வாரிசுகள் செய்து வரவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஆவணத்தின் படி பாலகிருஷ்ண நாயுடு என்பவரின் குமாரரான வேணுகோபால் நாயுடு என்பவரும், அவருக்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான முத்துநாராயணசாமி குமாரர் குமார் என்பவரும் தொடர்ந்து பரிவர்த்தனை செய்யப்பட்ட சொத்துக்களில் இருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு கோயில் நற்காரியங்களை செய்து வருகின்றார் என்றும், மேற்படி 3 கோயில்களும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் வந்தாலும், கோயில்களுக்கு செய்ய வேண்டிய நற்காரியங்கள் எவ்வித பாதிப்பும்

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:29:48 +0530

இல்லாமல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்றும், கோயில்களின் வசதிக்காகத்தான் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது என்றும், பரிவர்த்தனை ஏற்பட்டது ஊரில் உள்ள அனைவருக்கும் தெரியும் என்றும், 20 ஆண்டுகளுக்கு மேலாக யாருடைய ஆட்சேபனையுமின்றி வாதி வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார் என்றும், பிரதிவாதி தன்னுடைய சுயலாபத்திற்காக வாதியின் மீது உள்ள காழ்புணர்ச்சி காரணமாக வழக்குச் சொத்து சம்மந்தமாக ஆட்சேபனை செய்து இடையூறு ஏற்படுத்தி வருகிறார் என்றும், அதன் காரணமாக வழக்கை அனுமதிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

**5. வாதியின் வழக்குரை பிரதிவாதியின் எதிர்வழக்குரை, ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வழக்கின் தீர்வுக்காக 12.10.2022-ம் தேதியில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.**

| | |
|---|---|
| **1.** | **Whether the plaintiff is having absolute right and title over the suit property?** |
| **2.** | **Whether the plaintiff is entitled for declaration of title?** |
| **3.** | **Whether the plaintiff is entitled for permanent injunction as prayed for?** |
| **4.** | **Whether the plaintiff is entitled for mandatory injunction with regard to “B” schedule mentioned AEFG sketch mentioned property?** |
| **5.** | **To what other reliefs the plaintiff is entitled for?** |

**6.** வாதி தரப்பில் வாதி வெங்கடசுப்பு என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:29:53 +0530

செய்யப்பட்டுள்ளன. 3-ம் தரப்பினரான குமார் என்பவர் வா.சா.ஆ.2 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி ராஜேஷ்கண்ணன் பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் தரப்பில் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7. ஆவணங்கள்: -**

**7.1)** 29.05.2000 தேதியிட்ட பரிவர்த்தனை பத்திரம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் வழக்குச் சொத்தை பாலகிருஷ்ண நாயுடு என்பவரின் மகனான வேணுகோபால் நாயுடு என்பவர் சக்கரபானி நாயுடு என்பவரின் மகனான வாதி வெங்கடசுப்பு என்பவருக்கு பரிவர்த்தனை பத்திரம் மூலம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. 12.11.2009-ம் தேதியிட்ட பாகப்பிரிவனை பத்திரம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில் வாதி மற்றும் வாதியின் குமாரர் மற்றும் குமாரத்திகளுக்கு இடையே குடும்ப சொத்துக்களை பொருத்து பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் இவ்வழக்கு சொத்தானது "A" அட்டவணை சொத்தாக வாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. வாதி மற்றும் பிரதிவாதிக்கு இடையேயான சொத்து பிரச்சனை காரணமாக வானூர் காவல்நிலையத்தில் வாதியால் கொடுக்கப்பட்ட புகாருக்கு கொடுக்கப்பட்ட சி.எஸ்.ஆர் ரசீது எண்.66/2019 ஆனது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆகாசம்பட்டு கிராம புல எண்.25/6, 25/7, 26/2, 29/13, 30/1, 68/1, 98/1, 98/2 பூமிகளுக்கு வேணுகோபல் நாயுடு என்பவர் பெயருக்கு

வழங்கப்பட்ட பட்டா எண்.124 ஆனது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு புல எண்.28/2 மற்றும் புல எண்.61/8 ஐ பொருத்து அருள்மிகு வேதவிநாயகர் கோயில் பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்.137 ஆனது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7.2)** முத்துச்சாமி நாயுடு என்பவரின் குமாரர் பாலகிருஷ்ண நாயுடு என்பவர் வழக்குச் சொத்துக்களை பொருத்து 14.11.1935-ம் தேதியில் கோயில்களுக்கு எழுதி வைத்த தான பத்திரம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு புல எண்.28/2 மற்றும் புல எண்.61/8 ஐ பொருத்து அருள்மிகு வேதவிநாயகர் கோயில் பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்.137 ஆனது பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**8.** வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாய்ப்பளித்தும் பிரதிவாதி தரப்பில் வாதம் முன்வைக்கப்படவில்லை. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் பரிசீலனை செய்யப்பட்டது.

**9. எழுவினா-1 மற்றும் 2-க்கான தீர்வு:-**

**9.1)** வழக்குச் சொத்தானது ஆதியில் முத்துச்சாமி நாயுடு என்பவரின் குமாரர் பாலகிருஷ்ண நாயுடு என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்து மேற்படி பாலகிருஷ்ண நாயுடு என்பவரின் மகனான வேணுகோபால் நாயுடு என்பவர் வாதியுடன் ஏற்படுத்திக்கொண்ட வா.சா.ஆ.1 பரிவர்த்தனை பத்திரத்தின்படி வாதிக்கு பாயத்தியப்பட்டுள்ளதாக வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் வழக்கு சொத்தை பாலகிருஷ்ண நாயுடு என்பவரின் மகன் வேணுகோபால் நாயுடு என்பவர் சக்கரபானி நாயுடு என்பவரின் மகனான வாதி வெங்கடசுப்பு என்பவருக்கு

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:30:06 +0530

பரிவர்த்தனை பத்திரம் மூலம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. வழக்கு சொத்தை வாதி அனுபவத்து வருவதை பிரதிவாதி இடையூறு செய்து வருவதாகவும், வழக்குச் சொத்தில் உள்ள ஒரு பகுதியை பிரதிவாதி ஆக்கிரமித்து இரும்பு கேட் போட்டு தடுத்து நிறுத்தியுள்ளார் என்றும், அதன் காரணமாக விளம்புகை பரிகாரமும், நிரந்தர மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரப்பட்டுள்ளதாக வாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

**9.2)** பிரதிவாதி தரப்பில் வழக்குச் சொத்து ஆதியில் முத்துச்சாமி நாயுடு என்பவரின் குமாரர் பாலகிருஷ்ண நாயுடு என்பவருக்கு பாத்தியப்பட்டு இருந்து அதன்பின்னிட்டு வழக்கு சொத்துள்ள கிராமமான ஆகாசம்பட்டு கிராமத்திலுள்ள ஸ்ரீ வேதவிநாயகர் கோயில், கிராம தேவதையாகிய பிடாரி செல்லியம்மன் கோயில் மற்றும் ஸ்ரீ மாரி செங்கழனீர் அம்மன் கோயில் என்ற 3 கோயில்களுக்கும் 14.11.1935-ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் வழக்கு சொத்துக்களை மேற்படி கோயில்களுக்கு தானம் கொடுத்துவிட்டதாகவும், வருவாய் ஆவணங்கள் கோயிலின் பெயரில் இருந்து வருகிறது என்றும், அதற்கு ஆதரவாக பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2 ஆவணங்களை தாக்கல் செய்வதாக சொல்லப்பட்டுள்ளது.

**9.3)** பி.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் வழக்கு சொத்தையும் மற்றும் அ.பு.ச.எண்.121/1-ல் உள்ள 1.34 ஏக்கர் பூமியையும் முத்துச்சாமி நாயுடு என்பவரின் குமாரர் பாலகிருஷ்ண நாயுடு என்பவர் ஸ்ரீ வேதவிநாயகர் கோயில், கிராம தேவதையாகிய பிடாரி செல்லியம்மன் கோயில் மற்றும் ஸ்ரீ மாரி செங்கழனீர் அம்மன் ஆகிய மூன்று கோயில்களுக்கும் தர்மகர்த்தா மூலம் தான சொட்டில்மெண்ட்

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:30:11 +0530

எழுதப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. மேற்படி ஆவணத்தில் வழக்குச் சொத்துக்களை மேற்படி மூன்று கோயில்களுக்கும் தானமாக கொடுப்பதாகவும், மேற்படி பாலகிருஷ்ண நாயுடு என்பவர் உயிருடன் உள்ளவரை வழக்குச் சொத்துக்களை சாகுபடி செய்து அதிலிருந்து வரும் வருமானத்தை கொண்டு மேற்படி மூன்று கோயில்களுக்கும் தினம் தினம் ஒரு வேலை அன்ன நேய்வேத்தியம் செய்வதாகவும், அவரது காலத்திற்கு பின்பு அவரது ஆண் வாரிசுகள் செய்து வரவேண்டுமென்று வாசகம் கண்டு தானம் கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. பி.சா.ஆ.1 ஆவணத்தின் தொடர்புடைய வாசகங்கள் பின்வருமாறு:-

| |
|---|
| *"1935-ம் வருடம் நவம்பர் மாதம் 14-ம் தேதி திண்டிவனம் தாலுக்கா ஆகாசப்பட்டு கிராமத்தில் திருக்கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ வேதவிநாயகர் கோயில்-1, கிராம தேவதையாகிய பிடாரி செல்லியம்மன் கோயில்-1, ஸ்ரீ மாரி செங்கழனீர் அம்மன் கோவில்-1 இந்த மூன்று கோவில்களுக்கு தற்கால தர்மகர்த்தா ஷை ஆகாசம்பட்டு கிராமம் மணியம் இருந்த முத்துசாமி நாயுடு குமாரர் பாலகிருஷ்ண நாயுடுக்கு ஷை ஆகாசப்பட்டு கிராமத்திலிருக்கும் ஷை முத்துசாமிநாயுடு குமாரர் விஷ்ணு மதம் பயிர் பாலகிருஷ்ணநாயுடு எழுதிவைத்த தானப்பத்திரம். ரூ.100.00 நூறு ரூபாயான அடியில் கண்ட புஞ்சை நிலத்தின் சாகுபடி ஆதாயத்தை கொண்டு ஷை மூன்று கோவில்களுக்கும் தினம் தினம் ஒரு வேலை அன்ன நேவேத்தியத்திற்கு அடியில் கண்ட புஞ்சை நிலங்களை தானமாக விட்டு இருக்கிறேன்"* |

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:30:15 +0530

மேற்படி, பி.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் வழக்குச் சொத்துக்கள் மேற்படி மூன்று கோயில்களுக்கும் தானம் கொடுத்த பின்பு வழக்கு சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் அருள்மிகு வேத விநாயகர் கோயில் என்ற பெயருக்கு பட்டா எண்.117 ஆக பதிவாகியுள்ளது என்று பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் தெரியவருகிறது.

**9.4)** வழக்குச் சொத்திற்கு மூல உரிமையாளரான பாலகிருஷ்ண நாயுடு என்பவர் மேற்படி மூன்று கோயில்களுக்கு வழக்குச் சொத்துக்களை தானம் கொடுத்துவிட்ட பின்பு பாலகிருஷ்ண நாயுடு என்பவரின் மகனான வேணுகோபால் நாயுடு என்பவர் வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் வாதிக்கு பரிவர்த்தனை பத்திரம் எழுதியுள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. பாலகிருஷ்ண நாயுடு என்பவர் பி.சா.ஆ.1 ஆவணத்தில் தெளிவாக வழக்குச் சொத்துக்களை பொருத்து மூன்று கோயில்களுக்கும் தானம் கொடுத்ததாக குறிப்பிட்டு எழுதியுள்ளார். வழக்குச் சொத்தை தானம் எழுதிய பின்பு அதற்கு முரணாக வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதுவதற்கு பாலகிருஷ்ண நாயுடுவின் மகனான வேணுகோபால் நாயுடு என்பவருக்கு சட்டத் தகுதி இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. வழக்குச் சொத்துக்களை பொறுத்து வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதுவதற்கு பாலகிருஷ்ண நாயுடு என்பவரின் மகனான வேணுகோபால் நாயுடு என்பவருக்கு சட்ட தகுதி இல்லாததால் வாதி வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி உரிமை விளம்புகை பரிகாரம் கோர முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:30:20 +0530

**9.5)** வழக்குச் சொத்துக்கள் மேற்படி மூன்று கோயில்களின் பெயருக்கு தானம் எழுதி கொடுக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி மூன்று கோயில் நிர்வாகத்தினரையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளது அவசிய தரப்பினர்களை கட்சி சேர்க்காத காரணத்திற்காக வழக்கு பாதிப்படைந்துள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. வழக்கு சொத்திற்கான பட்டாவான வா.சா.ஆ.4 ஆவணம் அருள்மிகு வேதவிநாயகர் கோயில் என்ற பெயருக்கு பதிவாகியுள்ள நிலையில் வழக்குச் சொத்துக்கள் மேற்படி கோயில் நிர்வாகத்தினரின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது. பாலகிருஷ்ண நாயுடு என்பவரின் மகனான வேணுகோபால் நாயுடு என்பவருக்கு சட்டத் தகுதி இல்லாமல் பி.சா.ஆ.1 ஆவணத்திற்கு முரணாக வா.சா.ஆ.1 பரிவர்த்தனை பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளதால் வாதிக்கு வழக்குச் சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும், அதன் காரணமாக வாதி கோரிய விளம்புகை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 1 மற்றும் 2-ற்கு வாதிக்கு எதிராக தீர்ப்பு காணப்படுகிறது.

**10. எழுவினா 3-ற்கான தீர்வு:-**

**10.1)** வா.சா.ஆ.5 ஆவணமான வழக்குச் சொத்திற்கான பட்டாவை பரிசீலனை செய்கையில் வழக்குச் சொத்தின் உடைமை அருள்மிகு வேதவிநாயகர் கோயில் வசம் உள்ளது என்று இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது. இதிலிருந்து வழக்குச் சொத்தில் வாதி உடைமையில் இல்லை என்று தெளிவாக தெரியவருகின்றது. வழக்குச் சொத்தில் வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், வாதிக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 1 மற்றும் 2-ல் வாதிக்கு எதிராக தீர்வு

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:30:25 +0530

காணப்பட்டுள்ளதால் வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 3-ற்கு வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**<u>11. எழுவினா 4-ற்கான தீர்வு:-</u>**

எழுவினா 1, 2 மற்றும் 3 ஆகியவற்றில் வாதிக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதால் வாதி கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 4-ற்கு வாதிக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**<u>12. எழுவினா 5-ற்கான தீர்வு:-</u>**

எழுவினா 1 முதல் 4-ற்கு வாதிக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதால் வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று இவ்வெழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**13. முடிவில், வழக்கானது தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:30:29 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வானூர்.**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**:-

வா.சா.1 :- வெங்கடசுப்பு ( வாதி)

வா.சா.2 :- குமார் (3-ம் தரப்பினர்)

**<u>பிரதிவாதி  தரப்பு சாட்சிகள்</u>** :-

பி.சா.1:- ராஜேஷ்கண்ணன் (பிரதிவாதி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 29.05.2000 | வேணுகோபால் நாயுடு என்பவர் வாதி வெங்கடசுப்பு என்பவருக்கு எழுதிகொடுத்துள்ள பரிவர்த்தனை பத்திரம். | -சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 12.11.2009 | வாதி வெங்கடசுப்பு மற்றும் அவருடைய குமாரர் தருண்ராஜ், குமாரத்திகள் பத்மாவதி, லாவண்யா ஆகியோர்களுக்கிடையே குடும்ப சொத்துக்களை பொருத்து எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம். | -கணிணி நகல் |
| வா.சா.ஆ.3 | 06.03.2019 | வாதி சொத்து பிரச்சனை சம்மந்தமாக பிரதிவாதி மீது வானூர் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாருக்கு வழங்கப்பட்ட சி.எஸ்.ஆர் ரசீது எண்.66/2019. | - நகல் |
| வா.சா.ஆ.4 | 10.03.2019 | ஆகாசம்பட்டு கிராம புல எண்.25/6, 25/7, 26/2, 29/13, 30/1, 68/1, 98/1, 98/2 பூமிகளுக்கு | -கணினி நகல் |

Digitally signed by PONVENTHAN D
PONVENTHAN D
Date: 2026.03.30 17:30:34 +0530

| | | | |
|---|---|---|---|
| | | வேணுகோபல் நாயுடு என்பவர் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா எண்.124. | |
| வா.சா.ஆ.5 | 28.02.2019 | வழக்கு புல எண்.28/2 மற்றும் புல எண்.61/8-க்கு அருள்மிகு வேதவிநாயகர் கோயில் பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்.137. | - கணிணி நகல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாண்றாவணங்கள்</u>: -**

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 14.11.1935 | பாலகிருஷ்ண நாயுடு என்பவர் வழக்குச் சொத்துக்களை பொருத்து கோயில்களுக்கு எழுதி வைத்த தான பத்திரம். | -கணிணி நகல் |
| பி.சா.ஆ.2 | 29.08.2018 | வழக்கு புல எண்.28/2 மற்றும் புல எண்.61/8-க்கு அருள்மிகு வேதவிநாயகர் கோயில் பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்.137. | - கணிணி நகல் |

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.03.30 17:30:39 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வானூர்.**